கண்ணண்டஹள்ளி ஊராட்சியின்

ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: A·M·சுப்பிரமணி

அலுவலக கடித எண் : 01

நாள்: 20·01·2024

பொருள்: மனைப்பிரிவு (LAYOUT) ஒப்புதல் கிருஷ்ணகிரி மாவட்டம் - மத்தூர் ஒன்றியம். கண்ணன்டஹள்ளி ஊராட்சி கண்ணன்டஹள்ளி கிராம சர்வே எண். 818/2A - 0.46.50 ஹெக்டர் நிலப்பரப்பிலும், 818/2B - 0.55.0 ஹெக்டர் நிலப்பரப்பிலும், 820/2C -01.12.0 ஹெக்டர் நிலப்பரப்பிலும், 825/2B - 0.74.0 ஹெக்டேர் நிலபரப்பில் அமைக்கப்பட்ட குடியிருப்பு மனை பிரிவுக்கு ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை: மாவட்ட நுகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கிருஷ்ணகிரி அவர்களின் ந.க.எண். VIXDENS1/2023. நாள்.______ 2. இவ்வூராட்சி மன்ற தீர்மான எண்: 10 நாள் : 13.12.2023

உத்தரவு:

கிருஷ்ணகிரி மாவட்டம்,மத்தூர்ஒன்றியம்,கண்ணன்டஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட கிராமத்தில் கண்ணன்டஹள்ளி கிராம சர்வே எண். 818/2A - 0.46.50 ஹெக்டர் நிலப்பரப்பிலும் 818/2B - 0.55.0 ஹெக்டர் நிலப்பரப்பிலும், 820/2C -01.12.0 ஹெக்டர் நிலப்பரப்பிலும், 825/2B - 0.74.0 ஹெக்டர் நிலபரப்பிலும் அமைக்கப்பட்ட குடியிருப்பு மனை 134 மனைப் பிரிவிற்கு பார்வை 1-ல் கண்ட கடிதத்தின்படி மாவட்ட நகர ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை 01 கண்ட இவ்வூராட்சிமன்ற தீர்மானம் மூலமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது மேலும் இம்மனைபிரிவு ஒப்புதலுக்கு ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய மனைக்கான பரிசீலனை கட்டணம் மனை ஒன்றிற்கு ரூ.1000/- விதம் (134*1000) ரூ.1,34,000/- மேலும் மனைபிரிவுக்கு ஒப்புதல் கட்டணம் ரூ. 1000/- விதம் 2×1000-2000/- ஆய்வுகட்டணம் ரூ.1000/- மொத்தம் ரூ.1,37,000/- உரிய அரசு தலைப்பில் 30·01·2024 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

எனவே கண்ணன்டஹள்ளி கிராம சர்வே எண். 818/2A - 0.46.50 ஹெக்டர் நிலப்பரப்பிலும் 818/2B - 0.55.0 ஹெக்டர் நிலப்பரப்பிலும், 820/2C -01.12.0 ஹெக்டர் நிலப்பரப்பிலும், 825/2B - 0.74.0 ஹெக்டர் நிலபரப்பிலும் அமைக்கப்பட்ட குடியிருப்பு மனை 134 மனைப்பிரிவிற்கு குடியிருப்பு உபயோகத்திற்காக மட்டும் பயன்படுத்திக்கொள்ள இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவு வழங்கப்படுகிறது

நிபந்தனைகள்:-

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்றுதல் வேண்டும்

2 இம்மனுதாரருக்கு 3 அங்கிகரிப்பட்ட நில வரைப்படத்தில் உள்ளவாறு மட்டுமே மனைபிரிவிற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. முன் அனுமதியின்றி எவ்வித சிறு மாற்றமும் செய்யக்கூடாது

3 மனைப்பிரிவு கட்டிடங்கள் கட்ட ஆரம்பிக்கும் முன்னர் ஊராட்சியில் விடு கட்டுவதற்கான நீல வரைபட அனுமதி பெறவேண்டும் தவறினால் ஊராட்சி சட்டவிதிகளின்படி தகுந்த நடிவடிக்கை மேற்கொள்ளப்படும்

4 அரசாணை எண்.71 ஊரக வளர்ச்சித்துறை நாள் 01.06.2013-ன்படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காவிற்கு இடையூராக மனைப்பிரிவில் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது.

5. மனைப்பிரிவு வரைபட அனுமதி கட்டணங்கள் குறித்த தணிக்கையில் சுட்டிகாட்டப்படின் அத்தொகை செலுத்த தாங்களே பொறுப்பாக்கப்படும்.

6 எக்காரணத்தை கொண்டும் மேற்படி விதிகளை உதாசீனம் செய்தாலும் மீறினாலும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

7. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையின் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்பித்த வில்லங்கசான்றின் சரித்தன்மையை நகர ஊரமைப்பு. துணை இயக்குநர், கிருஷ்ணகிரிமாவட்டம் அவர்கள் உறுதிசெய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்படுகிறது இதில் ஏதேனும் தவறுகள் (அல்லது) ஆவணங்களின் சரிதன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கிகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

தலைவர்

ஊராட்சி மன்றத்தலைவர் கண்ணண்டஹள்ளி ஊராட்சி

மத்தூர் ஒன்றியம்

கண்ணண்டஹள்ளி ஊராட்சி

மத்தூர் ஒன்றியம்

பெறுதல்:-

1. திரு. கோபால்

த/பெ. லட்சுமணகவுண்டர், 76, சி. எஸ். நகர் எக்ஸ்டென்சன், கனிரவுத்தர்குளம், பெரியசேமூர், வீரப்பன் சத்திரம் அஞ்சல், ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம்

நகல்:-

1. துணை இயக்குநர். நகர ஊரமைப்பு கிருஷ்ணகிரிமாவட்டம்

2. சார்-பதிவாளர். சார்-பதிவாளர் அலுவலகம் போச்சம்பள்ளி

3. வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ | கி.ஊ)) மத்தூர்